JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//187/2022 |
| | : | Prosecution P.W - 2 |
| NAME | : | மணிகண்டன் |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் ஆட்டோ ஓட்டுநராக வேலை செய்கிறேன்.ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் தெருக்காரர். அசா.1 செல்வபிரபு என்பவரை தெரியும் சாட்சிகள் சுபத்ரியா கனி மற்றும் செல்லதுரை ஆகியோர்களை தெரியும். சாட்சி சுபத்ரியாக கனி இறந்து விட்டார். கடந்த ஆகஸ்ட் மாதம் 8ம் தேதி 2020ம் வருடம் மாலை 5.00 மணிக்கு செல்லசாமி மற்றும் அசா.1ன் தகப்பனார் செல்லதுரையின் வீட்டின் முன்பு குரோட்டன்ஸை ஊன்றி அதை வேலி போல் அமைத்து ஆஜர் எதிரி கவர் செய்து கொண்டிருந்தார் அப்போது அசா.1 எதற்காக எங்கள் இடத்தில் வைக்கிறீர்கள் என்று கேட்டதற்கு ஆஜர் எதிரி சின்ன கூதி மவனே நான் பார்த்து பிறந்த பையன் நீ இந்த இடத்தை பற்றி உனக்கு என்ன தெரியும் என்று கூறினார். ஆஜர் எதிரி பேசியதை காது கொடுத்து கேட்கமுடியவில்லை. பின்னர் ஆஜர் எதிரி கம்பை எடுத்து அசா.1ன் தலையிலும் வலது கையிலும் அடித்தார். அதன் பின் நானும், சுபத்ரியா கனியும் ஆஜர் எதிரியை சத்தம் போடவும் இதற்குமேல் இந்த விசயத்தில் தலையிட்டால் கொல்லாமல் விடமாட்டேன்

என அசா.1 ஐ மிரட்டி சென்றார். பின்னர் ஆட்டோ மூலம் நானும், அசா.1 ன் அப்பா செல்லதுரையும் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்னர் அங்கு இருந்து அசா.1 ஐ தென்காசி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள். பின்னர் தென்காசியிலிருந்து நான் விசாரித்ததில் திருநெல்வேலிக்கு அழைத்து சென்றதாக சொன்னார்கள். போலிசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi

JUDICIAL FORM NO.53
{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC//187/2022 |
| | : | Prosecution P.W - 1 |
| NAME | : | செல்வபிரபு |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Tuesday 10.02.2026.

**முதல் விசாரணை**

நான் தற்போது கிருஷ்ணாபுரத்தில் குடியிருந்து வருகிறேன். நான் இஞ்சினியரிங் படித்துள்ளேன். தற்போது வேலை எதுவும் பார்க்கவில்லை. சாட்சிகள் சுபத்ரியா கனி என் அத்தை அவர் இறந்து விட்டார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் என் பெரியப்பா. சாட்சி மணிகண்டன் என் தெருக்காரர். சாட்சி செல்லதுரை என் அப்பா. 8.8.2020 அன்று மாலை 5 மணிக்கு எங்கள் வீட்டு முன்பு வாசலில் ஆஜர் எதிரி எங்களுடைய இடத்தில் பூஞ்செடிகள் நட்டி அதை அடைத்து பின்னிக்கொண்டிருந்தார். எங்கள் இடத்தில் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என என் பெரியப்பாவிடம் நான் கேட்டேன். அதற்கு அவர் சின்ன கூதிமவனே நான் பார்த்து வளர்ந்த நீ என்னை பார்த்து கேட்கிறாயா என்று அசிங்க அசிங்கமாக திட்டினார். அந்த இடத்தில் எனக்கு அசிங்கமாக இருந்தது. அதன் பிறகு ஆஜர் எதிரி கம்பை எடுத்து என் தலையிலும் வலது கையிலும், தோள்பட்டையிலும், காலிலும் அடித்தார். அதில் எனக்கு வலது கையில் காயம் ஏற்பட்டு என்னால் தூக்க கூட முடியவில்லை. எனக்கு தலையில் இரத்தம் வந்து விட்டது. பின்னர் எனக்கு மயக்கம் வந்து விட்டது. அப்போது அங்கு வந்த என் அத்தை சுபத்ரியா கனி மற்றும் மணிகண்டன் வந்து என் பெரியப்பாவிடம் ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டதற்கு ஆஜர் எதிரி இனிமேல் இவ்வாறு

செய்தால் நான் உன்னை கொன்று விடுவேன் எனக்கு கொலைமிரட்டல் விடுத்து சென்றார். அதிலிருந்து எனக்கு ஆஜர் எதிரியை பார்க்கும் பொழுதெல்லாம் பயமாக உள்ளது.

அதன் பிறகு என் அப்பாவும், மணிகண்டனும் கடையநல்லூர் அரசு மருத்துவமனைக்கு என்னை ஆட்டோவில் அழைத்து சென்றார்கள். நான் கடையநல்லூர் அரசு மருத்துவமனையில் இருந்த போது போலிசார் என்னிடம் என்ன நடந்தது என்று வாக்குமூலம் கேட்டார்கள். நான் அவரிடம் சொன்னேன். என்னை கையெழுத்து போட சொன்னார்கள். என்னுடைய வலது கையை கொண்டு என்னால் கையொப்பம் செய்ய முடியவில்லை. அதனால் எனது இடது கைவைத்து கைரேகை வைத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான். புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். மேற்படி புகார் வாக்குமூலம் அசாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் அங்கிருந்து என்னை தென்காசி அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலம் அழைத்து சென்றார்கள். அங்கு ஒரு நாள் என்னை சிகிச்சையில் வைத்திருந்தார்கள். அங்கு முடியவில்லை என்பதால் திருநெல்வேலி ஐக்கிரவுண்ட் மருத்துவமனைக்கு போக சொன்னார்கள். ஐக்கிரவுண்ட் மருத்துவமனைக்கு போக பயமாக இருந்ததால் வண்ணார் பேட்டை, ரத்தினம் என்ற தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். அங்கு ஒரு மாதம் சிகிச்சையில் இருந்தேன். இரண்டு வாரங்கள் ஐசியூவில் வைத்தார்கள். எனக்கு தலையில் அறுவை சிகிச்சை செய்தார்கள். அப்போது தான் வலது கை செயல்படமுடியும் என்று மருத்துவர்கள் சொன்னர்கள். நான் தற்போது வரை மருந்துகள் சாப்பிட்டு கொண்டு தான் இருக்கிறேன். சிகிச்சைக்கு சென்று கொண்டு தான் இருக்கிறேன். ஆஜர் எதிரி என்னை தலையில்அடித்ததால் என்னால் வேலை செய்ய முடியவில்லை. தற்போது வரை என்னால் வலது கையை கொண்டு கையொப்பம் செய்வதற்கும், எழுதுவதற்கும் கஷ்டமாக தான் உள்ளது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாணை செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டும், குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//– Tmt.S.Muthulakshmi
Judicial Magistrate,
Tenkasi